**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-9-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பொது மருத்துவ முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தேசிய மாணவர் படையும் கொங்கு நாடு கிட்னி சென்டர், கொங்கு நாடு மருத்துவ மனை மற்றும் வாசன் கண் மருத்துவமனை சார்பில், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான பொது மருத்துவ முகாம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 17.09.2016 மற்றும் 18.09.2016 காலை 9.00 முதல் மாலை 4.00 வரை நடைபெற்று வருகிறது.

முகாம் துவக்க விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இயற்கை நமக்களித்த வரப்பிரசாதமான உடலைப் பாதுகாத்து, நீண்ட ஆயுள் வாழ, மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து தெளிவாக தமது உரையில் எடுத்துரைத்தார்.

கொங்குநாடு மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் திரு. பி. ராஜீ மற்றும் கொங்கு நாடு கிட்ணி சென்டரின் நிர்வாக இயக்குநர் அ.பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டு, மாணவர்களும் ஊழியர்களும் எவ்வாறு உடல் பரிசோதனை செய்து நோய் வரும் முன் உயிர் காக்க வேண்டும் என்று எடுத்துரைத்தனர்.

விழாவில் முனைவர் எஸ். மகிமைராஜா முதன்மையர் (வேளாண்மை) அவர்கள் கலந்து கொண்டு, உடல் நலத்தைப் பாதுகாப்பது மற்றும் மருத்துவ முகாம்களின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஓய்வூதிய சங்கத் தலைவர் முனைவர் எஸ். உத்தமசாமி அவர்கள் தமது உரையில் மூத்த குடிமக்களின் தேவைகளையும் அவர்களுக்கான மருத்துவ சேவைகளின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

முன்னதாக, தேசிய மாணவர்படை அலுவலர்கள் லெப்டினன்ட் செல்லமுத்து வரவேற்புரையும் கேப்டன் மனோன்மணி நன்றியுரையும் வழங்கினார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்